அனுப்புநர்

உறுப்பினர்-செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
எண்.1 காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை-600 008.

பெறுநர்

செயல் அலுவலர்,
சிட்லபாக்கம் பேரூராட்சி,
சிட்லபாக்கம்,
சென்னை-64.

5/6

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

கடித எண். பி1/8033/2005 நாள்: 8.3.2007.

அய்யா,

பொருள்: சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் - திட்டஅனுமதி - நிலஅளவை எண்.115/1சி,1பி, 117/1ஏ1, 1ஏ2ஏ, 2ஏ1பி,3; 118/1ஏ3, 1பி, 1சி & 2, சிட்லபாக்கம் கிராமம் - சென்னையில் வாகன நிறுத்தகதளம் + நான்கு தளங்கள் கொண்ட ஒரு தொகுப்பு மற்றும் தரைதளம் + இரண்டு தளங்கள் கொண்ட மற்றும் ஒரு தொகுப்பும் கொண்ட குடியிருப்புக் கட்டிடம் (48 குடியிருப்புகள்) ஒப்பளிக்கப்பட்டிருப்பது - தொடர்பாக.

பார்வை: 1. சிறப்புக் கட்டிடப்பிரிவு/விரைவுப் பிரிவு எண். 286/2005இல் 18/3/2005 அன்று பெறப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பம்
2. திருத்திய வரைப்படம் பெற்ற நாள் 28.9.06.
3. இவ்வலுவலகக் கடித நாள் 27.11.2006.
4. விண்ணப்பதாரர் கடித நாள் 9.1.2007.
5. விண்ணப்பதாரர் கடித நாள் 22.2.2007.

...

நில அளவை எண். 115/1சி,1பி, 117/1ஏ1, 1ஏ2ஏ, 2ஏ1பி, 3, 118/1ஏ3, 1பி, 1சி & 2 சிட்லபாக்கம் கிராமம், சென்னையில் வாகன நிறுத்தகதளம் + நான்கு தளங்கள் கொண்ட ஒரு தொகுப்பும் மற்றும் தரைத்தளம் + இரண்டு தளங்கள் கொண்ட மற்றும் ஒரு தொகுப்புக் குடியிருப்புகள் கட்டிடம் (48 குடியிருப்புகள்) கொண்ட கட்டிடத்தைக் கட்டுவதற்கு பார்வை-2ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்திய வரைப்படம் பார்வை-3ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

2. விண்ணப்பதாரர் பார்வை-4ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு ரசீது எண். 166995, நாள் 11.1.2007 இல் மற்றும் ரசீது எண். 17927, நாள் 22.2.2007ல் கீழ்க்கண்ட கட்டணங்களை செலுத்தியுள்ளார்.

| | | |
|---|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | : ரூ. | 83,000/- |
| வரன்முறைக் கட்டணம் | : ரூ. | 31,000/- |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம் | : ரூ. | 3,30,000/- |
| கழிவு நீர்த்தொட்டிக்கான காப்புறுதிக் கட்டணம் | : ரூ. | 48,000/- |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | : ரூ. | 10,000/- |
| மொத்தம் | ரூ. | 5,02,000/- |

3. உத்தேச திட்டத்திற்குக் கட்டட அனுமதி வழங்குவதற்கு முன்னால் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகளுக்கான வடிவமைப்புகளுக்கு உரிய அனுமதியை சென்னைக் குடிநீர் வாரியத்திடமிருந்து பெறப்பட்டு இருக்கிறதா என்று உறுதிசெய்து கொள்ளுமாறு உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

த.பி.பா.

4. மேல்நோக்கு வடிகட்டு கழிவு நீர்த்தொட்டியின் பராமரிப்பை முதலில் கட்டிட முனைவோரே மேற்கொள்ள வேண்டும். குடியிருப்போர் சங்கம் உருவாக்கப்பட்ட பின் அதனிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வரையில் கட்டிட முனைவோரே அதைப் பராமரிக்கவேண்டும்.

5. அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகள் குழுமத்திற்கு திருப்தி அளிக்கும் வகையில் அமையாதிருப்பதும் ஒப்பளிக்கப்பட்ட வரைப்படத்திற்கு மீறியதாகவும் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கு முரணானதாகவும் கருதப்பட்டு அமலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

6. கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் கழிவு நீர்த்தொட்டிகள் சுகாதாரமுறையில் உறுதியாக மூடப்பட்டு கொசுத் தொல்லைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

7. எஸ்.பி/சிறப்புக் கட்டிடம்/84ஏ-எப்/2007, நாள் 8.3.2007 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைப்படங்கள்/வரைப்படங்களின் தொகுதிகள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 8.3.2007 இருந்து 7.3.2010 வரை செல்லுபடியாகும்.

8. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு விண்ணப்பதாரர் உள்ளாட்சியை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்றப்பிறகுதான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

9. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறதா என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல் ஒப்பளிக்கப்பட்ட வரைப்படத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

13/3/07

இணைப்பு:
1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்
2. திட்ட அனுமதியின் இரண்டு படிகள்

உறுப்பினர்-செயலருக்காக.

13.3.07

நகல்: 1. சாந்திநிகேதன் புராஜெக்ட்,
கிரீன்பார்க்,
எண்.1 சிட்டிலிங்க்சாலை,
ஆதம்பாக்கம், சென்னை-88.
(வங்கி உத்தரவாதம் எண்.1/2007 இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் இருந்து பெறப்பட்டதை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

2. உறுப்பினர்,
உரியதுறை,
108 உத்தமர் காந்திசாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-34.

3. வருமானவரி ஆணையர்,
168 உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-34.

4. தலைத்திட்ட அமைப்பாளர்,
செயலாக்கப் பிரிவு,
செ.பெ.வ.குழுமம், சென்னை-8.

கேகே/12/3